## இந்திய அரசியலமைப்பு

### பகுதி - 10

### இந்தியா ஒரு அறிமுகம்

1. நமது இந்திய நாடு பழமையான நாகரீகத்தையும், உயர்ந்த பண்பாட்டையும், சிறந்த பண்புகளையும் உடைய நாடு.
2. இந்தியா உணவு உற்பத்தியில் தன்நிறைவையும், தொழில் துறையில் உலக அளவில் 10 **வது இடத்தையும்** பெற்றுள்ளது.
3. உலக நாடுகளின் வரிசையில், விண்வெளி ஆய்வில், 6 **வது இடத்தைப் பெற்றுள்ளது இந்தியா.**
4. நில அளவு அடிப்படையில் 32,87,263 **சதுர கி.மீ.** பரப்பளவை கொண்டது.
5. உலகின் 7 வது மிகப்பெரிய நாடு - **இந்தியாவாகும்**.
6. மக்கள் தொகை அடிப்படையில் உலகின் 2 வது அதிக மக்கள் தொகை கொண்ட நாடு - **இந்தியாவாகும்.**
7. இந்தியாவின் இருப்பிடம், இந்தியா வடக்கே இமயமலை, தெற்கே இந்தியப் பெருங்கடல், கிழக்கே வங்காள விரிகுடா, மேற்கே அரபிக் கடல் ஆகியவற்றினால் சூழப்பட்டுள்ளது.
8. இந்தியா, பூமியின் **வடஅரைக் கோளத்தின்** தெற்கு பகுதியில் அமைந்துள்ளது.
9. 8°4’ **முதல்** 37°6’ வரை வட அட்ச ரேகையிலும், 68°7’ **முதல்** 97°25’ வரை கிழக்கு தீர்க ரேகையிலும் இந்தியா பரவியுள்ளது.
10. 2011 ஆம் ஆண்டு மக்கள் கணக்கீட்டின் படி 121 கோடியே 1 லட்சத்து 93 ஆயிரத்து 422 மக்கள் இந்தியாவில் உள்ளனர். இவர்களில் ஆண்கள் 62

கோடியே 37 லட்சத்து 24 ஆயிரத்து 248 பேர் ஆவர். பெண்கள் 58 கோடியே 64 லட்சத்து 69 ஆயிரத்து 174 பேர் ஆவர்.

11. 2011 ஆம் ஆண்டு மக்கள் கணக்கீட்டின் படி, **இந்தியாவின் மக்கள் அடர்த்தி 382 பேர்.**

12. **மக்கள் அடர்த்தி** என்பது, ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வாழும் மக்களின் சராசரி எண்ணிக்கையாகும்.

13. 2011 ஆம் ஆண்டு மக்கள் கணக்கீட்டின் படி இந்திய நாட்டில் **கல்வியறிவு** பெற்றவர்களின் எண்ணிக்கை 74.04%. இதில் ஆண்கள் 82.14% பெண்கள் 65.46% கல்வியறிவு பெற்றவர்கள் ஆவர்.

14. இந்தியா உலகளவில் **மிகப்பெரிய நாடாளுமன்ற மக்களாட்சியை** கொண்ட நாடாகும்.

15. இந்தியா இறையாண்மை உடைய, சமதர்ம, மதசார்பற்ற, சமத்துவ, மக்களாட்சி, குடியரசு நாடாகும்.

16. இந்திய அரசியலமைப்பின் படி இந்திய குடியரசு நிர்வகிக்கப்படுகிறது.

17. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் --- **பிங்காலி வெங்கையா**.

18. இந்திய தேசியக் கொடி, இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்? **22 ஜூலை, 1947.**

19. இந்திய தேசியக் கொடி, எந்த நாளில் இந்தியாவிற்கு வழங்கப்பட்டது? **ஆகஸ்ட் - 14, 1947.**

20. **செவ்வக வடிவிலான** இந்திய தெசியக் கொடியின் நீள - அகல விகிதம் --- **3:2.**

21. இந்திய தேசியக் கொடியில் மேலே உள்ள இளஞ்சிவப்பு நிறமானது **சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தையும், தைரியத்தையும்** குறிக்கிறது.

22. இந்திய தேசியக் கொடியின் நடுவே உள்ள வெண்மை நிறமானது, **தூய்மையையும்**, **உண்மையும்** குறிக்கிறது.

23. இந்திய தேசியக் கொடியின் வெண்மை நிறத்தின் நடுவெ கரு நீலத்தில் உள்ள சக்கரமானது **அறநெறியில்** சென்று **அமைதியையும்**, **செழுமையையும்** பெறவேண்டும் என்பதனைத் தூண்டுகிறது. இச்சக்கரம் 24 **ஆரங்களை** உடையது.

24. இந்திய தேசியக் கொடியின் வெண்மை நிறத்தின் நடுவெ கரு நீலத்தில் உள்ள சக்கரமானது, சாரநாத்தில் உள்ள **அசோக ஸ்தூபியிலிருந்து** எடுக்கப்பட்டதாகும்.

25. இந்திய தேசியக் கொடியின் வெண்மை நிறத்தின் நடுவெ கரு நீலத்தில் உள்ள சக்கரத்தின் ஆரமும், தேசியக் கொடியின் வெள்ளை நிற பட்டையின் அகலமும் சமமானதாகும்.

26. இந்திய தேசியக் கொடியின் வெண்மை நிறத்தின் நடுவெ கரு நீலத்தில் உள்ள அசோகச் சக்கரமானது **இயக்கத்தையும்**, **தலைமை பண்பையும்** குறிக்கிறது.

27. இந்திய தேசியக் கொடியின் கீழே உள்ள கரும் பச்சை நிறம், **இந்தியாவின் செழிப்பையும், வளமான நிலத்தையும், பசுமையினையும், நம்பிக்கையையும்** குறிக்கிறது.

28. இந்திய தேசிய கீதத்தை இயற்றியவர் --- **ரவீந்திரநாத் தாகூர்**.

29. இந்திய தேசிய கீதமானது **ரவீந்திரநாத் தாகூர்** அவர்களால் வங்க மொழியில் இயற்றப்பட்டது. **இப்பாடல் மொத்தம் 5 பத்திகளை உடையது.** அவற்றில் முதல் பத்தியில் உள்ள பாடல்கள் மட்டுமே தேசிய கீதமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

30. 1911 **ஆம் ஆண்டு டிசம்பர்** 27 ஆம் நாள், கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தேசிய கீதம் முதன் முதலாக பாடப்பெற்றது.
31. 1950 **ஆம் அண்டு ஜனவரி 24 ஆம் நாள்** அன்று தேசிய கீதமானது இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
32. இந்திய தேசிய கீதத்தை பாடி முடிக்கவேண்டிய கால அவகாசம் என்ன? **52 விநாடிகள்**.
33. இந்திய தேசிய கீதத்தின் குறுகிய வடிவம் (Short Version) பாடி முடிக்கவேண்டிய கால அவகாசம் என்ன? **20 விநாடிகள்**.
34. **இந்திய தேசிய கீதமானது**, நம் இந்திய தாய் திருநாட்டின் **பெருமையையும், புகழையையும்** பிரதிபளிப்பதாக உள்ளது. மேலும் இது **தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகிப்புத்தன்மை, நாட்டுப்பற்று** ஆகிய அறச்செய்திகளை உணர்த்துகிறது.
35. நமது இந்திய நாட்டின் இலச்சினை சாரநாத்தில் உள்ள அசோக ஸ்தூபியில் உள்ள அமர்ந்த நிலை நான்கு சிங்கங்களாகும். இது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் இந்திய நாட்டின் இலச்சினையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
36. நமது இந்திய சின்னத்தில் உள்ள அமர்ந்த நிலை நான்கு சிங்கங்கள் முதுகில் ஒன்றோடு ஒன்று இணைந்து வட்ட பீடத்தில் அமர்ந்துள்ளன. பார்பதற்கு 3 சிங்கங்களே தெரியும் ஏனெனில் 4 வது சிங்கமானது பின்புறமாக அமைந்துள்ளது.
37. நமது இந்திய சின்னத்தில், உள்ள அமர்ந்த நிலை நான்கு சிங்கங்கள் இலச்சினையானது, **அதிகாரத்தையும்**, **கம்பீரத்தையும்**, குறிக்கிறது. இச்சிங்கங்கள் அமர்ந்துள்ள பீடத்தின் கீழே **குதிரை**, **சக்கரமும்**, **காளை**

ஆகிய உருவங்கள் இடம்பெற்றுள்ளது. **'குதிரை' ஆற்றலையும், வேகத்தையும்** குறிக்கிறது, **'காளை' கடின உழைப்பையும், உறுதியையும்** குறிக்கிறது, **'சக்கரம்' தர்மத்தையும், அறவழியையும்** குறிக்கிறது. மேலும் இதன் கீழே தேவநாகிரி மொழியில் **"சத்யமேவ ஜெயதே"** எனும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளது இதன் பொருள் '**வாய்மையே வெல்லும்**' என்பதாகும்.

38. இந்தியாவின் தேசியப் பாடல் --- "**வந்தே மாதரம்**"
39. 1882 ஆம் ஆண்டு '**ஆணந்த மடம்**' என்னும் நூலில் வெளியான "**வந்தே மாதரம்**" பாடலை சமஸ்கிரத மொழியில் எழுதியவர்? **பங்கிம் சந்திர சட்டர்ஜி (வங்க மொழிக் கவிஞர்)**.
40. 1896 ஆம் ஆண்டு **கல்கத்தாவில்** நடைபெற்ற **இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில்** "**வந்தே மாதரம்**" பாடல் முதன் முறையாக பாடப்பட்டது. இப்பாடலை முதன் முதலில் பாடியவர், **ரவீந்தரநாத் தாகூர்.**
41. இந்திய தேசிய பாடலான "**வந்தே மாதரம்**" பாடல், இந்திய தேசிய கீதத்திற்கு **"ஜன கன மன"** இணையான மதிப்பினை 26 **ஜனவரி**, 1950 இல் பெற்றது.
42. இந்தியாவின் தேசிய விலங்காக முதன் முதலில் **சிங்கமே** தேர்வு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது '**வங்காள புலி**' யே இந்தியாவின் தேசிய விலங்காக நடைமுறையில் உள்ளது.
43. இந்தியாவின் தேசிய விலங்காக தேர்வு செய்யப்பட்டுள்ள '**வங்காள புலி**' வலிமை, திறமை, மிகுந்த ஆற்றல் ஆகிய பண்புகளை குறிக்கிறது.
44. இந்தியாவின் தேசியப் பறவையாக, **மயில்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மயிலின் அழகான இறகுகள் இந்தியாவின் அழகை பிரதிபளிக்கிறது. இந்திய இலக்கியங்கள் மயிலின் பெருமைகளை சிறப்பாக விவரிக்கின்றன.

45. இந்தியாவின் தேசிய மலர் --- **தாமரை**.

46. இந்தியாவின் தேசிய பழம் --- **மாம்பழம்**.

47. இந்தியாவின் தேசிய விளையாட்டு --- **ஹாக்கி.**

48. இந்தியாவின் தேசிய ஆறு --- **கங்கை நதி**.

49. இந்தியாவின் தேசிய மரம் --- **ஆலமரம்**.

50. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளாப்பட்ட போது இந்தியாவின் தேசிய மொழிகளின் எண்ணிக்கை --- 14 **மொழிகள்**.

51. தற்போது இந்தியாவின் தேசிய மொழிகள் --- 22 **மொழிகள் (இந்திய அரசியலமைப்பு அட்டவணை** - 8).

52. இந்தியாவின் அதிகாரப்பூர்வ ஆட்சி மொழி --- **இந்தி**.

53. இந்தியாவின் அலுவல் மொழிகள் --- **இந்தி, ஆங்கிலம்.**

54. இந்தியாவின் தேசிய நாட்காட்டி --- **கிருக்கேரிய நாட்காட்டி சகா ஆண்டு** 22 - **மார்ச்**, 1957 **ஆம் ஆண்டு** முதல் பின்பற்றப்படுகிறது.

55. சகா ஆண்டில் உள்ள நாட்கள்? 365 **நாட்கள்**.